# இயேசு இறந்த நாள்

மிகவும் அதிகமாக நீ நேசிக்கும் ஒருவருக்காக எதையும் செய்வாயா? தேவன் நம்மை மிகவும் அதிகமாக நேசிக்கிறார். எனவே, நம்மை மீட்பதற்காகத் தம்முடைய சொந்தக் குமாரனையே தந்தார். இயேசுவும் நமக்காக மரிப்பதற்கும் ஆயத்தமாக இருந்தார்.

இயேசுவைப் பலவிதமாகச் சித்திரவதைச் செய்தவர்கள் இப்போது இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். இரண்டு கள்ளர்களுக்கு மத்தியில் இயேசு சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தார். இயேசுவின் சிலுவையைச் சுமந்த சீமோனும் இந்தக் கொடூரமான காட்சியை வேதனையோடு பார்த்துக்கொண்டிருந்தார்.

சிலுவையில் அறையப்படுவது என்பது எளிதானது அல்ல. குற்றவாளியின் கைகளிலும் கால்களிலும் பெரிய ஆணிகளால் சிலுவை மரத்தோடு சேர்த்து அறைவார்கள். பின்னர் அந்தச் சிலுவையைப் பூமியில் நடுவார்கள். அந்த ஒவ்வொரு அசைவின்போதும் ஏற்படும் வலியைச் சொல்லமுடியாது. இயேசுவையும் அப்படித்தான் அறைந்தார்கள்.



மக்கள் அனைவரும் பெருங்கூட்டமாகத் திரண்டு வந்திருந்தனர். சிலுவையில் மிகுந்த வேதனையுடன் பரிதாபமாகத் தொங்கும் இயேசுவைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இயேசுவைக் கேலிசெய்து துன்புறுத்திய பொல்லாதவர்களும் அங்கே நின்றனர்.

‘‘நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா’’ என்று ஒருவன் இளக்காரமாய்க் கத்தினான்.

‘‘மற்றவர்களை இரட்சித்தான்; ஆனால், தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள இவனால் முடியவில்லை’’என்று மற்றொருவன் கேலிசெய்தான்.

‘‘சிலுவையிலிருந்து நீ இறங்கிவந்தால், நாங்கள் உன்னை விசுவாசிப்போம்’’என்

## மனன வசனம்

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**

**யோவான் 3:16.**

றான் இன்னொருவன்.

"தேவன் இவன்மேல் பிரியமாயிருந்தால், அவர் இவனை விடுவிக்கட்டும்" என்று அடுத்தவன் சொல்லிச் சிரித்தான்.

இவர்கள் செய்த கேலியும், நிந்தையும் போதாது என்பது போல, இயேசுவின் அருகே அறையப்பட்டிருந்த அந்தக் கள்ளர்களும் இயேசுவைக் கேலி செய்தார்கள். இயேசுவின் உடலும் உள்ளமும் கடும் வேதனையால் துடித்துக்கொண்டிருந்தது. பயங்கரமான கொடிய வேதனையையும் மிகப் பொறுமையோடே இயேசு சகித்துக்கொண்டிருந்தார். ஆயினும், சற்று நேரத்தில் ஒரு கள்ளன் மனம் மாறிவிட்டான். அதுவுமன்றி, கேலி செய்த மற்ற கள்ளனையும் கண்டித்தான். தன்னை இயேசு ஏற்றுக்கொள்ளும்படியாகவும் கெஞ்சினான்.

நமக்காகப் பூமியில் மரிக்க வந்த இயேசு நம்முடைய பாவங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டார். யாவருடைய பாவமும் ஒன்றாய்த் திரண்டு பிதாவின் முகத்தை இயேசுவுக்கு மறைத்தது. அப்போது, "என் தேவனே, என் தேவனே ! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என இயேசு கதறினார்.

பிதாவாகிய தேவன் நம் இயேசுவைக் குற்றப்படுத்தவில்லை. தேவனும், தேவ தூதர்களும், பரலோகிலிருந்து இயேசு அனுபவிக்கும் கொடிய வேதனையைத் தாங்கமுடியாத வேதனையுடனே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இயற்கையும் தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தியது.

மூன்று மணிநேரம் பூமியைக் காரிருள் மூடியது; பூமி மிகவும் அதிரப் பாறைகள் இடம் பெயர்ந்தன. மத் 27:51.

நீ மிகவும் நேசிக்கும் ஒருவருக்காகப் பயங்கரமான மரணத்தை ஏற்றுக்கொள்வாயா?



# செய்தி

**இயேசுவின் அன்பைப் பிறருக்குச் சொல்லும்போது, நாம் தேவனுக்குச் சேவைசெய்கிறோம்.**

இயேசு அடைந்த கொடிய மரணத்திலிருந்து நம்மை எவ்வளவு அதிகமாக அவர் நேசிக்கிறார் என்று அறியலாம். உன்னையும் என்னையும், இந்த உலகிலுள்ள யாவரையும் இயேசு மிகவும் அதிகமாக நேசிக்கிறார். எனவே தான், இக்கொடிய தண்டனையை ஏற்று மரணத்தையும் அடைந்தார்.

அவருடன் நாம் என்றென்றும் நித்தியமாக வாழவேண்டும் என்பதற்காகவே இயேசு கொடூரமான மரணத்தை அடைந்தார். இயேசுவின் அன்பு எதற்கும் இணையில்லாத அன்பு. இந்த அன்புதான் கிறிஸ்தவத்தின் மையப்பகுதி. இந்த மாசற்ற, சுயநலமற்ற அன்பினை உணர்ந்தே நாம் பாடுகிறோம்; ஜெபிக்கிறோம்; நல்ல செயல்களைச் செய்ய விரும்புகிறோம்.

என் செல்லமே, இயேசுவின் அன்பை மற்றவர்களுக்குச் சொல்லுவாயா?

## செய்முறை

*நாம் தேவனுக்கு எப்படிச் சேவை செய்யவேண்டும் என்பதை எழுது. விடையைக் கண்டுபிடிக்கக் கீழுள்ள எழுத்துக்களையும் குறியீடுகளையும் பயன்படுத்து.*

**தே___னுடைய**



**அ___பை**



**பிற___க்குச்**



**சொ___.**



| வ | ல் | ன் | ரு |
|---|---|---|---|
|  |  |  |  |